வெங்காடம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் : செல்வி R.ஸாருகலா B.E அவர்கள்

மனைப்பிரிவு அனுமதி எண் : 01/2024-2025 நாள்: 03-01-2025

பொருள் : மனைப்பிரிவு - தென்காசி மாவட்டம்-கடையம் வட்டாரம் - வெங்காடம்பட்டி ஊராட்சி ,வெங்காடம்பட்டி - II கிராமம் புல எண்: 1198 ல் 16400 ச.மீ (4.05 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைபிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது - நகர் ஊரமைப்பு துறையின் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் - வழங்கி உத்திரவிடல் தொடர்பாக.

பார்வை: 1. ஆரசாணை (நிலை)எண்:181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (UD4(1) துறை நாள் : 09-12-2020

2. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களின் ந க எண் : QPTJKH0O/2024/TCP நாள் :12-11-2024

3. நாள்: 23-09-2024 மனைப்பிரிவு வரைபட அனுமதி எண் : SWP/39/2024

தென்காசி மாவட்டம் கடையம் வட்டாரத்திற்குப்பட்ட வெங்காடம்பட்டி ஊராட்சியில் வெங்காடம்பட்டி கிராமம்-II புலஎண் 1198 ல் 16400 ச.மீ (4.05 ஏக்கர்) பரப்பளவில் திரு S.முகம்மது ஆரிபு மற்றும் மற்றவர்கள் ,76, நடுத்தெரு அய்யனார் ஊத்து கயத்தார் தாலுகா தூத்துக்குடி மாவட்டம் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு (99 மனைகள்) உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களின் பார்வை 2 ல் கண்ட இணையதள கடிதத்தில் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு மனை மேம்பாட்டளாரால் கீழ்கண்டவாறு இடங்கள் பொது பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.

அ) உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களின் ந.க.எண் : QPTJKH0O/2024/TCP வழங்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தின்படி மனைப்பிரிவு சாலைகள் திறவிடங்கள் பொது பயன்பாட்டிற்கான இடங்கள் ஆகியவை கடையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்து தானம் ஆவண எண் : 4073/15-10-2024 மூலம் வெங்காடம்பட்டி ஊராட்சி உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1	பூங்கா	1098.42 சமீ
2	மனைபிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்கு	5481.24 ச.மீ
3	பொது உபயோகம் (PUBLIC PURPOSE) ஒதுக்கீடு A	70.04 ச.மீ
4	பொது உபயோகம் (TANGEGCO) ஒதுக்கீடு B	67.68 ச.மீ

அரசாணை (நிலை) எண் :181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 09-12-2020 பத்தி 5(VI) ல் தெரிவக்கப்பட்டவாறு மனைப்பிரிவில் தார் சாலைகள்,மழைநீர் வடிகால்கள் தெருவிளக்குகள்,பகிர்மானகுழாய்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை ஊராட்சி குறிப்பிடும் தரத்தில் மனை மேம்பாட்டாளரால் செய்து முடிக்கப்பட வேண்டும்.

மேலும் இம்மனைப்பிரிவிற்கு (99 மனைகள்) உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி அவர்களின் பார்வை 2ல் கண்ட கடிதத்தில் உள்ள நிபந்தனைகள் மனைமேம்வாட்டளாரால் தவறாமல் செயல்படுத்தப்பட வேண்டும்.
மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதலின் படி விதிக்கப்பட்ட மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் அளித்து மனைப்பிரிவு அனுமதி எண் : 01/2024-25 நாள் : 03-01-2025 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இவ்வுத்தரவில் கண்ட நிபந்தனைகள் மீனை மேம்பாட்டளாரால் கடைப்பிடிக்கப்படாமல் போனாலோ நிபந்தனை மீறல் மனைமேம்பாட்டளரால் காணப்பட்டாலோ ,இவ்வனுமதி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட விதிகளின் கீழ் மறுக்கப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

R. Shanmuga 3/01/2025

தலைவர்/செயல் அலுவலர்

வெங்காடம்பட்டி ஊராட்சி

03-01-2025

பெறுநர் :

1. திரு S.முகம்மது ஆரிபு மற்றும் மற்றவர்கள்
   76 , நடுத்தெரு அய்யனார் ஊத்து கயத்தார் தாலுகா
   துத்துக்குடி மாவட்டம்

நகல்:

உதவி இயக்குநர்
மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி.

அனுப்புநர் :

R.ஸாருகலா B.E,

ஊராட்சி மன்ற தலைவர்,

வெங்காடம்பட்டி.

பெறுநர் :

S.முகம்மது ஆரிபு மற்றும் மற்றவர்கள்

76, நடுத்தெரு அய்யனார் ஊத்து

கயத்தார் தாலுகா

தூத்துக்குடி மாவட்டம்.

ஐயா,

பொருள் : மனைபிரிவு அனுமதி சம்பந்தமாக.

கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்காடம்பட்டி ஊராட்சி வடமலைப்பட்டிஊரில் அயன் புஞ்சை சர்வே எண் 1198 ல் 16400 ச.மீ (4.05 ஏக்கர்) பரப்பளவில் தங்களுக்கு மனைபிரிவு அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு ஊராட்சி மன்றத்தில் 10.01.2025 ம் தேதிய தீர்மான எண் 15 ன் படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. தீர்மான நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நன்றி

இப்படிக்கு

R. Sharukala 10/01/2025

தலைவர்,

வெங்காபடம்பட்டி ஊராட்சி.

10.01.2025

இணைப்பு:

1.தீர்மான நகல்.

படிவ எண்: 43

வெங்காடம்பட்டி ஊராட்சி மன்றம்

தீர்மானம் நகல்

2025 ம் வருடம் ஜனவரி மாதம் 10 ந்தேதி வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மேற்படி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள் தலைவர் செல்வி R.ஸாருகலா B.E., மற்றும் வார்டு உறுப்பினர்கள்

பொருள்	தீர்மானம்
வெங்காடம்பட்டி ஊராட்சி வடமலைப்பட்டி ஊரில் அ.பு.ச.எண் 1198 ல் மனைபிரிவு அனுமதி வழங்கியதை அங்கீகரிக்க.	தீர்மானம் 15 அங்கீகரிக்கப்பட்டது.

(உண்மை நகல்)

R. Sharukala 10/01/2025
தலைவர்
ஊராட்சி மன்றம்
வெங்காடம்பட்டி.

10.01.2025